1972 டிசம்பர் 6]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சிபுரம் வட்டம், அய்யம்பேட்டை கிராமத்தில் சர்வே எண் 3-ல் உள்ள 1–47 ஏக்கர் நிலம் " வண்டிப் பாதை " புறம்போக்கு என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி 1–42 ஏக்கர் பரப்பளவில் 22 செண்ட் நிலத்தில் 13 பேர் குடியிருப்பிற் காகக் குடிசைகள் கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். தற்போது ஆக்கிரமிப்பு செய்துள்ள மேற்படி 22 செண்ட் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களுக்கு ஒப்படை செய்யும் பொருட்டு காஞ்சிபுரம் தாசில்தார் நடவடிக்கை எடுத்தார். மேற்படி ஆக்கிரமிப்பானது வள்ளுவப்பாக்கத்தி லிருந்து அய்யம்பேட்டைக்குச் செல்லும் பாதையையும் அய்யம்பேட்டை வழியே பெருஞ்சாலைக்குச் செல்லும் பாதையையும் இடைமறிக்கின்றது என்றும், மேற்படி ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டுமென்றும் தெரிவித்து வள்ளுவப்பாக்கம் கிராமத்தினர் காஞ்சிபுரம் தாசில்தாருக்கு மனு ஒன்றை அனுப்பினர். ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களிடமிருந்து சிறிது நிலத்தையும் வள்ளுவப்பாக்கம் கிராமத்தின் நத்தம் புறம் போக்கிலிருந்து சிறிது பட்டா நிலத்தையும் எடுத்துக்கொள்வதன் மூலம் நடைபாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை நீக்குவதென இப்போது கருதப்படுகிறது. மேற்படி ஏற்பாட்டிற்கு வள்ளுவப்பாக்கம் கிராமத்தினர் ஒப்புக் கொண்டுள்ளனர்.

Salem Steel Plant.

* 54 Q.—THIRU N. K PALANISWAMY, THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government of India propose to form a company for the Salem Steel Plant ; and

(*b*) if so, whether this Government has requested for a share in the same ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) சேலம் ஸ்டீல் லிமிடெட் என்ற பெயரில் ஒரு தனி கம்பெனி நிறுவப்பட்டு விட்டது.

(இ) இல்லை.

* 55—*Q.* THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have any proposal to provide alternative sites for the persons in Salem whose lands have been acquired for the starting of a Steel Plant ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.